பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 11 வெள்ளிக்கிழமை 27.08.2021 கதிர் 159

## சட்டவிதிகளை மீறிய மேலும் 626 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 626 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுப் பரவுவதைத் தடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப் படுத்தல் சட்டவிதிகளை மீறிய ☞2

## குடாநாட்டில் கொரோனா அசுர வேகம் இன்று மாத்திரம் 414 பேர் அடையாளம்

### மேலும் 4 பேர் உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் 414 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டின் பல பகுதிகளில் இன்று மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனைகளின்போது 364 பேர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். அதேவேளை, பி.சி.ஆர். பரிசோதனைகளின் போது 50 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இன்று தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் அதிகபட்சமாக சாவகச்சேரியில் 124 பேரும், கரவெட்டியில் 102 பேரும் அடங்குகின்றனர். அதேவேளை, பருத்தித்துறையில் 56 பேர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். இதேவேளை, குடாநாட்டில் இன்று 4 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

## யாழில் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான இரண்டாவது தடுப்பூசி

கொரோனாத் தடுப்பூசிகள் மூன்றாம் கட்டமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளன.

இவை 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான இரண்டாவது தடுப்பூசிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளின் ஊடாக குறிப்பிட்ட வயதினருக்கான இரண்டாவது ☞2

# செப். 6ஆம் திகதி வரை ஊரடங்குச் சட்டம் நீடிப்பு

### ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு



நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மேலும் ஒரு வாரத்துக்குத் தொடர்ந்து நீடிக்கப்படுகின்றது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். அதற்கமைய எதிர்வரும் 30ஆம் திகதியுடன் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலம் நிறைவடையவுள்ள நிலையில், செப்டெம்பர் 6ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்படுகின்றது என ஜனாதிபதி கூறியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கொரோனாத் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணி கூட்டத்தின்போதே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ☞2

## அத்தியாவசிய சேவைகளுக்கு ஊரடங்கு காலத்தில் அனுமதி

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு செப்டெம்பர் 6ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த காலத்தில் அனைத்து ஏற்றுமதித் துறை மற்றும் ஆடை தொழிற்சாலைகள் வழக்கம் போல் செயற்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தக்காலப்பகுதியில் அனைத்து விதமான அத்தியாவசிய ☞2

## வீடுகளுக்குச் சென்றே அன்டிஜன் சோதனை

### சுகாதார அமைச்சர் தகவல்



வீடுகளிலேயே துரித அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ளும் திட்டத்தை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போது, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். ☞2

### கொரோனாவின் பிடியிலிருந்து மீண்டு

## வீடு திரும்பினார் அஜித் றோஹண



சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும் முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண கொரோனாத் தொற்றிலிருந்து குணமாகி மருத்துவமனையிலிருந்து இன்று வீடு திரும்பியுள்ளார்.

அவர் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் இருந்து வெளியேறுவதற்கு முன்னதாக ☞2

## வவுனியாவின் புதிய அரச அதிபராக பி.ஏ.சரத் சந்திர இன்று பதவியேற்பு

(ந.லோகதயாளன்)

வவுனியா மாவட்ட புதிய அரச அதிபராக பௌத்தசாசன அமைச்சில் உயர் அதிகாரியாகப் பணியாற்றிய பி.ஏ.சரத் சந்திர இன்று பதவியேற்றார்.

வவுனியா மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய சமன் பந்துலசேன வடக்கு மாகாண பிரதம செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றிருந்தார்.

இதையடுத்து மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றிய தி.திரேஸ்குமார் கடந்த ஒரு மாதகாலமாக பதில் ☞2

### ஜி.சீ.ஈ. உயர்தரம், தரம் 5 புலமைப்பரிசில்

## பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை செப்.15 வரை நீடிப்பு

2021ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்காக விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ளோர் எதிர்வரும் செப்டெம்பர் 15ஆம் திகதி வரையில் விண்ணப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை மற்றும் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தைக் கருத்தில் கொண்டு விண்ணப்பக் கால ☞2

## மேலும் 20 லட்சம் 'சினோபோர்ம்' நாளை வருகின்றது நாட்டுக்கு

சீனாவிலிருந்து மேலும் 20 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் நாளை இலங்கைக்குக் கொண்டுவரப்படவுள்ளன என்று இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தத் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறுமானால், இதுவரை சீனாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடி 80 லட்சமாக அதிகரிக்கும். ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மேலும் 20 லட்சம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், இம்மாதத்தில் சீனாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை 70 லட்சமாகவும் மாறும் என்றும் சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

## செப். 6ஆம் திகதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் தொடர்ந்து கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்த நிலையில், மகாநாயக்க தேரர்கள், எதிர்க் கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் நாட்டை இரு வாரங்களுக்கு முடக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தன.

இதையடுத்து, கடந்த 20ஆம் திகதி இரவு 10 மணிமுதல் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மூலம் நாடு முடக்கப்படுகின்றது என அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிதிகளை மீறிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டில் இதுவரை 59 ஆயிரத்து 621 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு அமுலில் உள்ள நிலையில், மேல் மாகாணத்துக்கு நுழையும் மற்றும் அங்கிருந்து வெளியேறும் 13 இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நேற்று மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறும் பகுதியில், 307 வாகனங்களில் பயணித்த 515 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேலும், மேல் மாகாணத்துக்குப் பிரவேசித்த 302 வாகனங்களில் பயணித்த 580 பேர் சோதனைச்சாவடிகளில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## வீடு திரும்பினார் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவமனை பணிக்குழாமினருக்கு நன்றி தெரிவித்து, எடுத்துக்கொண்ட படத்தை இங்கு காணலாம்.

## பரீட்சைகளுக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லையை நீடிக்கத் தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடத்துவதற்கும், உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி முதல் டிசெம்பர் 10ஆம் திகதி வரையில் நடத்துவதற்கும் கல்வி அமைச்சால் கடந்த ஜூலை மாதத்தில் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவின் புதிய......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச அதிபராகப் பொறுப்புக்களை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், பௌத்தசாசன அமைச்சில் முக்கிய பதவியை வகித்த பி.ஏ. சரத் சந்திரவை வவுனியா மாவட்டத்துக்கான புதிய அரச அதிபராக அமைச்சரவை அனுமதித்த நிலையில் அவர் அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் இன்று தனது பதவியை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் சுப நேரமான மதியம் 1.30 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மதகுருமார்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலகத்தின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## அத்தியாவசிய .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள், மருந்து தயாரிப்பு மற்றும் விநியோகம், விவசாயம், ஆடைக் கைத் தொழில் ஆகியவற்றை எவ்வித இடையூறுமின்றி முன்னெடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத்தவிர, 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பிரஜைகளுக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கான வேலைத்திட்டம் சுகாதாரத்துறையினரால் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளார்.

## வீடுகளுக்குச் சென்றே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரில் 86 வீதமானோர் பல்வேறு நோய்களுக்குள்ளானவர்கள் எனவும், 12 வீதமானோர் ஒரு தடுப்பூசியைமாத்திரம் ஏற்றிக்கொண்டவர்கள் எனவும் இதன் போது அவர் கூறியுள்ளார்.

இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களில் 2.5 வீதமானவர்களே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் எனவும், அவர்களும் ஏனைய நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழில் 30 வயதுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.


**விளம்பரத் தொடர்புகளுக்கு**

**தொலைபேசி இலக்கம்- 076 443 8622**

**மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com**



## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## நட்டாற்றில் நாடு

"விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த எங்களுக்குக் கொரோனாவை வெற்றிகொள்வது அப்படியென்ன இயலாத காரியமா?" – இது கடந்த ஆண்டு கொரோனாத் தொற்றுப் பரவுகை ஆரம்பித்த சமயத்தில் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பீற்றிக்கொண்ட விடயம்.

இந்தப் பீற்றல் அணுகுமுறைதான் இப்போது நாட்டுக்கு பேரழியை – பேரிழியைத் தந்திருக்கின்றது என்பதுதான் உண்மை.

நீண்ட பல காலம் விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு யுத்தம் புரிந்தது. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு முனையில் புலிகளுடன் யுத்தத்தை நடத்திப் பலனை எட்ட முடியாது என்று கண்ட அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இலங்கையின் யுத்த இயந்திரம் கடைசியாகப் புதிய அணுகுமுறையை மேற்கொண்டது. ஒரே சமயத்தில் பல முனைகளில் – எல்லாப் பக்கங்களிலிருந்தும் – இடைவெளி விடாமல் – ஓய்வு கொடுக்காமல் தொடர்ந்து – யுத்தத்தை நடத்துவது என்பதுதான் அந்தத் திட்டம்.

மனிதப் பேரழிவுகளுடன் அந்த முனைத் திட்டம் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அணிக்கு வெற்றியை வாங்கித் தந்தது. விடுதலைப் புலிகளை முறியடிக்க முடிந்தது.

அந்த தந்திரோபாயத்திலிருந்து கோட்டா அரசு இன்னும் வெளியே வரவேயில்லை.

அதே யுத்த தந்திரோபாய அணுகுமுறையை நாட்டின் நிர்வாக அரசியலிலும் கைக்கொண்டு, முட்டாள்தனம் பண்ணி, நாட்டைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி நடு வீதிக்குக் கொண்டு வந்து நிறுத்தி இருக்கின்றது இந்த அரசு.

இராணுவப் பாணி மன வடிவமைப்பில் ஊறிப் போய்விட்ட ஒருவரை நாட்டின் தலைவராக தேர்ந்தெடுத்த அரசியல் பழி பாவத்துக்கு – வினைக்கு – விலை கொடுக்க வேண்டிய கட்டாயம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஒரே சமயத்தில் யுத்தத்தைப் பலமுனைகளில் திறந்தமையால் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டோம் என்ற மமதையில் – மன எண்ணத்தில் – மனவமைப்பில் – மிதக்கும் கோட்டாபய ராஜபக்ஷவின் சிந்தனைப் பீடம் அதே அணுகுமுறையை ஆட்சி முறையிலும் காட்டியுள்ளது.

கொவிட் தொற்று என்ற பேரிடர் நாட்டைச் சூழ்ந்து இருக்கையில், அதைத் தனித்து முழுக் கவனத்தையும் செலுத்தி எதிர்கொள்வதாயின், ஏனைய நெருக்கடி தருகின்ற பிரச்சினைகளை ஆறப்போட்டு தள்ளி வைக்க வேண்டும், அந்தத் தொற்றுப் பேரிடர் குறித்து ஏகமாகச் சிந்தித்து, நடவடிக்கை எடுத்து, அந்த நெருக்கடியைத் தாண்டுவதுதான் புத்திசாலித்தனம்.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக செயற்கை இரசாயனங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்ய மக்களை வழிப்படுத்தி, தூண்டி, ஊக்குவித்து வந்த அரசு திடுதிப்பென ஒரே சமயத்தில் இரசாயன உரங்கள், களைக்கொல்லிகள் போன்றவற்றின் இறக்குமதி மற்றும் உற்பத்தியைத் தடை செய்து அதிரடி விவசாயப் புரட்சி ஒன்றுக்குக் களத்தில் இறங்கியது.

ஒரே நாளில் – ஒரே வருடத்தில் – அதைச் செய்வது உள்நாட்டில் பெரும் அதிருப்தியை – பெரும் நெருக்கடிகளை – பெரும் சிக்கல்களை – சிரமன்களை – தரும் விடயம். விவசாயத்தில் ஒரு புரட்சிகர மாற்றமாக – மோசமான நெருக்கடி விளைவுகளை எதிர் கொண்டபடி – முன்னெடுக்கப்பட வேண்டிய விவகாரம் அது.

அந்தப் புரட்சிக்கு திட்டமிட்டாலும் கூட, அதை முன்னெடுக்கின்ற சமயத்தில் அதிலும் விடப் பெரிய பிரச்சினையாக கொவிட் தொற்றுப் பேரிடர் வந்துவிட்டது, நாடும் மக்களும் பேரழிவைச் சந்திக்க கூடிய கொடிய பேரழிவாக நம் நாட்டின் மீது அது விழுந்திருக்கிறது. மிகுந்த பின்னடைவுகளை ஏற்படுத்தப் போகின்ற கொடூரத்தை எதிர்கொள்வதற்காக மற்ற யுத்த முனைகளைத் தற்காலிகமாக மூடுவோம் என்று சிந்தித்துக் காரியமாற்றுவதுதான் புத்திசாலித்தனம்.

நாட்டுக்குப் பேரிழப்பைத் தரப்போகும் நெருக்கடி காலத்தில் நாட்டின் பொருளாதார அழுத்தங்களை சமாளிப்பதற்காக பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் என்ற வெள்ளை யானைக்கு தீனிபோடும் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டும். அதிக செலவுத்தானத்துக்கான அந்த யுத்த முனையை மூடுவது, கொவிட் தொற்றுப் பேரிடர் என்ற பெரும் யுத்த முனையில் நாடு அதிக சிரத்தை – கவனம் – எடுக்க உதவும்.

இதையெல்லாம் மறந்து நாடு எதிர்கொள்ள வேண்டிய பல பிரச்சினைகளுக்கான யுத்தமுனைகளை ஒரே சமயத்தில் திறந்து, நாட்டை நட்டாற்றில் விட்டு இருக்கின்றது கோட்டா அரசு.

# ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்தாலும் விமான நிலையங்கள் மூடப்படவில்லை!

### சுற்றுலாப் பயணிகள் தாராளமாக வரலாம் என்கிறார் அமைச்சர் பிரசன்ன



இலங்கையில், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது, ஆனால் விமான நிலையங்கள் மூடப்படவில்லை. ஆகவே வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் நாட்டுக்கு வருகை தரலாம் என சுற்றுலாத்துறை சேவை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இந்திய நாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கைக்கு சுற்றுலா பிரயாணத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகள் இரண்டடையும் பெற்றுக்கொண்ட இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தரலாம், சமூகத்துடன் தொடர்புகொள்ளலாம். ஏனைய நாட்டுப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தரலாம். நாட்டுக்கு வருகை தந்த தன் பின்னர் பி.சி.ஆர். பரிசோதனை எடுக்கப்படும். பரிசோதனையின் பெறுபேற்றில் வைரஸ் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே அவர்கள் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும்.

22 சுற்றுலா மையங்கள் விசேடமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பிரயாணிகள் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமையவே செயற்பட வேண்டும்.

சுற்றுலாப் பிரயாணிகள் தங்குமிடம் மற்றும் சுற்றுலாப்பயணங்கள் மேற்கொள்ளும் இடங்கள் ஆகியவை முழுமையாகக் கண்காணிக்கப்படும். சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய சுற்றுலாத் துறை சேவையை முன்னெடுத்து செல்வது கட்டாயமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஆளும் கட்சியின் உதவிக் கொறடாவாக பிரமித்த பண்டார தென்னகோன் நியமிப்பு



நாடாளுமன்ற ஆளும் கட்சியின் உதவி கொறடாவாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார தென்னகோன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கான நியமனக் கடிதம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று (வியாழக்கிழமை) அலரி மாளிகையில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார தென்னகோனுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

2021 செப்டெம்பர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி சாகர காரியவசம், ஆளும் கட்சியின் பிரதம கொறடாவின் செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கொரோனாத் தொற்றுக்குள்ளாவோர் எண்ணிக்கை 40 வீதமாக அதிகரிப்பு

### இலங்கை தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை 40 வீதமாக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவு, இலங்கை, தீமோர்-லெசுடே சனநாயக குடியரசு தவிர்ந்த தென்கிழக்கு ஆசியாவின் சில நாடுகளில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இந்த மாதம் 24 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வாராந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, இலங்கையின் மத்திய மாகாணத்தில் கடந்த வாரம் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் மேல் மாகாணத்திலேயே அதிகமாக 57 வீத தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தமிழர்களின் பிரச்சினைகளை அரசிடம் கோரிக்கையாக முன்வைக்க வேண்டும்

### அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் கருத்து

அரசுடன் பேச்சுக்குச் செல்வோர் தமிழர்களின் அன்றாடப் பிரச்சினையைத் தீர்ப்பதை அரசின் நல்லெண்ண கோரிக்கையாக முன்வைக்க வேண்டும் என அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஐந்து வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

ஒன்று அரசியல் தீர்வு என்கிற அடிப்படைப் பிரச்சினை, இரண்டு இன அழிப்பிற்குச் சர்வதேச நீதி கோருகின்ற பிரச்சினை, மூன்றாவது அன்றாடம் இடம்பெறுகின்ற ஆக்கிரமிப்பு பிரச்சினை, நான்காவது காணிப்பறிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உட்பட இயல்பு நிலையைக் கொண்டுவருகின்ற பிரச்சினை, ஐந்தாவது போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களைப் பேணுதல் தொடக்கம் மக்கள் அன்றாடம் சந்திக்கின்ற அன்றாடப் பிரச்சினை, இந்த ஐந்து பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின்ற. நெருக்கடி நிலையில் மக்கள் இருக்கிறார்கள்.

ஆகவே இந்த விடயங்கள் அரசினுடைய பேச்சுகளில் முன்னுரிமை வகிக்க வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

இதில் அரசியல் தீர்வு விடயத்தையும், இன அழிப்பிற்குச் சர்வதேச விசாரணை கோருகின்ற விடயத்தையும் ஒரு நீண்டகால திட்டமாகக் கணிப்பிட்டு அதற்கு ஒரு கால அட்டவணையை நிர்ணயிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# காபூலில் குண்டுவெடிப்பு ௯௦ பேர் பரிதாபச் சாவு

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல் விமான நிலையம் அருகே நேற்று (வியாழக் கிழமை) நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்கு தல்கள் மற்றும் துப்பாக்கிச்சூட்டில் அமெ ரிக்கக் கடற்படை வீரர்கள் 13பேர் உயிரி ழந்துள்ளனர் என்று அமெரிக்கத் தரப்பு தெரிவித்துள்ளது. இதனால், காபூல் தாக் குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90ஆக உயர்ந்துள்ளதோடு 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ஐ.எஸ். பயங்கரவாதக் குழு இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது என்று அமெரிக்கா தெரி வித்துள்ளது.

இந்த நிலையில் இத்தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் வெளியிட்டுள் ளது. இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறுகையில், ஆப்கானிஸ் தானிலிருந்து அமெரிக்கர்களை முழுவது மாக மீட்போம். எங்களுடைய ஆப்கானிஸ் தான் கூட்டாளிகளையும் அங்கிருந்து வெளியேற்றுவோம்.

எங்களுடைய மீட்புப் பணி தொடர்ந்து நடைபெறும். காபூல் விமான நிலைய குண்டுவெடிப்பு சம்பவத்தை நாங்கள் மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட் டோம். அதற்குப் பதிலாக எங்கள் படைகளுடன் உங்களை வேட்டை யாடுவோம். காபூல் விமான நிலையத்தில் நடந்த இந்த தாக்குதலில் தலிபான்களுக் கும் இஸ்லாமிய அரசாங்கத்துக்கும் தொடர்பு இருப்பதாக எந்தவித ஆதாரமு மில்லை' என்றார். முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்த துயரம் இனி ஒருபோதும் நடக்க அனுமதிக்கக்கூடாது என்று தெரிவித்தார். காபூல் இரட்டை குண்டு வெடிப்பு தாக்குதலில் உயிரிழந்த கடற்படை வீரர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வித மாக, அமெரிக்கா முழுவதும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் காபூலில் பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தவர் களை நினைவுகூரும் வகையில் ஓகஸ்ட் 30 மாலை வரை வெள்ளை மாளிகை மற் றும் அனைத்து பொதுக் கட்டடங்கள், மைதானங்களில் அமெரிக்கக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கப்படும் என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி கூறினார்.






# காபூல் தாக்குதலுக்கு பரவலாக கண்டனங்கள்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் விமான நிலையம் அருகே நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு இந்தியா, பிரிட்டன், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

அதே நேரம் நிலைமை மோசமாக இருப்பதால் ஆப்கானியர்களுக்கு உதவ உலக நாடுகள் முன்வரவேண்டும் என ஐ.நா. கேட்டுக் கொண்டுள்ளது. காபூல் விமான நிலையம் அருகே நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் தொடர்ந்து உயிரி ழப்பு எண்ணிக்கை அதிகரித்து வரு கிறது.

இந்நிலையில், தாக்குதலுக்கு இந்தியா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் துயரில் பங்கேற்பதாக இந் திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிராக உலக நாடுகள் ஓரணியில் திரள வேண்டும் என்பதை இந்தச் சம்பவம் காட்டு வதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.

காபூலில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவம் காட்டுமிராண்டித்தனமானது என கண்டனம் தெரிவித்திருக்கும் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன், எஞ்சியிருக்கும் நாள்களுக்குள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற நினைப்பவர்களுக்கு உதவ, பிரிட்டன் படையினர் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதே போல் இந்தச் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்திருக்கும் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரோஸ், ஆப்கானிஸ்தான் மக்களுக்கு உடனடியாக உதவ உலக நாடுகள் முன் வரவேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

# அகதிகளை வெளியேற்றி முடித்தது பிரான்ஸ்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலிருந்து தங்கள் நாட்டவர்களையும் பிறரையும் பாதுகாப்பாக வெளியேற்றும் தங்களது பணி நிறைவு பெற்றது என்று பிரான்ஸ் அறிவித்துள்ளது. இன்றுடன் (வெள்ளிக்கிழமை) தமது வெளியேற்றங்கள் அனைத்தும் நிறுத்தப்படும் என்று பிரத மர் ஜீன் காஸ்டெக்ஸ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'வெள்ளிக்கிழமை மாலைக்குள் தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ள காபூலில் இருந்து ஆபத்தில் உள்ள பிரான்ஸ் நாட்டினரை ஆப்கானிஸ்தானி லிருந்து வெளியேற்றும் நடவடிக்கையை பிரான்ஸ் முழுமை யாக முடித்துவிடும். வெள்ளிக்கிழமைக்குப் பிறகு காபூல் விமான நிலையத்திலிருந்து மக்களை வெளியேற்றும் பணியைஎங்களால் தொடரஇயலாது. நாங்கள் நீண்டநாளைக்கு காபூல் விமான நிலையத்தில் இருந்து அகதிகளை வெளியேற்ற முடியாது' எனக் கூறினார். இதுவரை ஆப்கானிஸ்தானில் இருந்து 2,500பேர் தலைநகர் பாரிஸிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் காபூல் நகரை தலிபான் கள் கைப்பற்றும் முன்னர் அழைத்து வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் அதிரும் கொரோனா; உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு



சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் 200 நாடுகளுக்கும் மேல் பரவியுள்ளது. கொரோனா வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

உலக அளவில் கொரோனா பாதிப் பில் முதலிடத்தில் அமெரிக்காவும், இரண்டாம் இடத்தில் இந்தியாவும், மூன் றாவது இடத்தில் பிரேஸிலும் உள்ளன.

அமெரிக்காவில் கடந்த சில நாள்க ளாக கொரோனா வைரஸால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் மேலும் 1.50 லட்சத்துக்கு மேற்பட்டோ ருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய் யப்பட்டது. இதையடுத்து அங்கு கொரோ னாவால் பாதிப்பு அடைந்தோர் எண் ணிக்கை 3.93 கோடியைக் கடந்துள்ளது.

# வெனிசூலாவின் மரிடாவில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இருபது பேர் சாவு



தென் அமெரிக்க நாடான வெனி சுலாவின் மரிடா மாகாணத்தில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வரு கிறது.

இந்த கனமழை காரணமாக மாகா ணத்தின் பல்வேறு ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், பல்வேறு இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் மரிடா மாகாணத்தில் 1,200க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. நகரின் பல்வேறு இடங்களில் சாலை, மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள் ளது.

இந்நிலையில், மரிடா மாகாணத் தில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 20 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், பலர் படுகாயம் அடைந்துள்ளனர். 17 பேர் வெள்ளத்தில் அடித்துச்செல் லப்பட்டும், நிலச்சரிவில் சிக்கியும் மாயமாகியுள்ளனர்.

இதையடுத்து காணாமல் போனவர் களை மீட்கும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.



# தமிழகத்திலுள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கு மேம்படுத்தப்பட்ட உதவித் திட்டங்களை அறிவித்தார் தமிழக முதல்வர் ஸ்டாலின்





முகாம்கள் மற்றும் வெளிப்பகுதிகளில் தங்கியிருக்கும் இலங்கைத்தமிழர்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கானதிட்டங்களைக்கொண்ட அறிவிப்பினைதமிழகசட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளார்.

இன்றைய சட்டப் பேரவை நிகழ்வில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றும்போது, முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளின் கல்வி மேம்பட 50 மாணவர்களுக்கான கல்வி மற்றும் விடுதிக் கட்டணத்தை அரசே ஏற்கும். அரசுக் கல்லூரிகளில் படிக்கும் இலங்கைத் தமிழ் மாணவர்களின் கல்வி உதவித் தொகை உயர்த்தப்படும். பொலிடெக்னிக்கில் படிக்கும் மாணவர்களுக்கான உதவித்தொகை பத்தாயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

அவரது அறிவிப்பில் வெளியான ஏனைய விடயங்கள் வருமாறு –

இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியை உயர்த்திக் கொள்ளவும், வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை அளிக்க 10 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்படும்.

சிறு, குறு தொழில் செய்திட ஏதுவாக முகாம்களில் உள்ள 300 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாக ஒவ்வொரு சுய உதவிக் குழுவுக்கும் தலா ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபா வழங்கப்படும். கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 301 சுய உதவிக் குழுக்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட ஐம்பதாயிரம் ரூபாவோடு மேலும், எழுபத்தைந்தாயிரம் ரூபா வழங்கப்படும். இதற்காக நடப்பு நிதியாண்டில் 6 கோடியே 16 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாமில் வசிப்பவர்களின் வாழ்வாதாரத்திற்காக மாதந்தோறும் அவர்களுக்குப் பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது. குடும்பத் தலைவருக்கு ஆயிரம் ரூபாவும், இதர பெரியோர்களுக்கு 750 ரூபாவும், 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 400 ரூபாவும் தற்போது வழங்கப்பட்டுவருகிறது.

இந்த பணக் கொடை கடந்த 10 ஆண்டுகாலமாக உயர்த்தப்படாத நிலையில், இனி குடும்பத் தலைவருக்கு மாதந்தோறும் 1,500 ரூபா, இதர பெரியவர்களுக்கு 1,000 ரூபா, 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 500 ரூபா என உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக 21 கோடியே 40 லட்சம் ரூபா செலவாகும்.

முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுவரும் மண்ணெண்ணை ஒதுக்கீடு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின் கீழ் இவர்கள் எரிவாயு இணைப்புப் பெற இயலாத நிலை உள்ளது. எனவே ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கப்படும். இதற்காக அரசிற்கு ஒருமுறை 7 கோடி ரூபா செலவினம் ஏற்படும்.

அது தவிர, குடும்பத்திற்கு 5 எரிவாயு உருளைக்கு தலா 400 ரூபா வீதம் மானியத்தொகை வழங்கப்படும். இதற்காக 3 கோடியே 80 லட்சம் ரூபா ஆண்டு தோறும் ஒதுக்கீடு செய்யப்படும். தற்போது இவர்களுக்கு வழங்கப்படும் 20 கிலோவிற்கு மேல் வழங்கப்படும் அரிசிக்கு, கிலோ ஒன்றுக்கு 55 சதம் வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இனி இதனை ரத்துசெய்துச் அவர்கள் பெறும் முழு அரிசி அளவும் விலையில்லாமல் வழங்கப்படும். இதற்கான செலவுத் தொகையான 19 லட்சம் ரூபாவை அரசே ஏற்றுக்கொள்ளும்.

முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு கோ–ஆப் டெக்ஸ் மூலம் ஒவ்வொரு ஆண்டும் இலவச ஆடைகளும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இலவச போர்வைகளும் வழங்கும் திட்டத்தில், ஒன்றிய அரசு நிர்ணயித்த விலையில் ஆடைகளை வாங்கி வழங்க இயலாத நிலையில், நடப்பு ஆண்டிற்கு பெறப்பட்ட விலைப் புள்ளிகளின் அடிப்படையில் குடும்பம் ஒன்றிற்கு 1,790 ரூபாவிலிருந்து 3,473 ரூபாவாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக அரசிற்கு ஆண்டொன்றிற்கு 3 கோடி ரூபா கூடுதல் செலவாகும்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள 250 ரூபா மதிப்பில் 8 வகையான சமையல் பாத்திரங்களை ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக வழங்க இயலாத நிலையில், 1,296 ரூபா மதிப்பில், சேலம் இந்திய உருக்காலை நிறுவனம் மூலம் உயர்த்தப்பட்ட விகிதத்தில் பாத்திரங்கள் வழங்கப்படும். இதனால் அரசுக்கு 1 கோடியே 97 லட்சம் ரூபா கூடுதலாக செலவாகும்.

முகாமில் வசிக்கும் அகதிகளுக்கும், வெளிப்பகுதிகளில் உள்ள அகதிகளுக்கும் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட குடியுரிமை வழங்குதல் மற்றும் இலங்கை திரும்பும் அகதிகளுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற நீண்டகாலத் தீர்வினைக் கண்டறிய ஏதுவாக, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், ஒரு சட்டப் பேரவை உறுப்பினர், பொதுத்துறைச் செயலாளர், மறுவாழ்வுத்துறை இயக்குநர் மற்றும் பிற அரசு அலுவலர்கள், அரசு சாரா உறுப்பினர்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதி மற்றும் வெளிப்பகுதிகளில் வசிக்கும் அகதிகளுக்கான பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஓர் ஆலோசனைக் குழு விரைவில் அமைக்கப்படும்.

இந்த விடயங்களை அறிவித்த தமிழகமுதல்வர்மு.க.ஸ்டாலின், இலங்கைத் தமிழர்களின் நலம் பேணிட, வீடு மற்றும் இதர கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தலுக்கு 261 கோடியே 54 லட்சம் ரூபா, கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை உறுதி செய்திட 12 கோடியே 25 லட்சம் ரூபா, அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட 43 கோடியே 61 லட்சம் ரூபா என மொத்தம் 317 கோடியே 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்

## ஓணம் பண்டிகைத் தளர்வுகள் காரணமாக கேரளாவில் கொரோனாப் பாதிப்பு உச்சம்



இந்தியாவில் கொரோனா இரண்டாவது அலை பரவல் கணிசமாக குறைந்து வந்த நிலையில் கடந்த சில நாள்களாக பாதிப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதைத் தரவுகள் காட்டுகின்றன.

குறிப்பாக, ஓணம் பண்டிகைக்காக அனுமதிக்கப்பட்ட தளர்வுகள் காரணமாக கேரளாவில் கொரோனாத் தொற்றுப் பாதிப்பு அதிகரித்து வருகிறது. மாநிலம் முழுவதும் கடந்த 24 மணிநேரத்தில் புதிதாக 31,445 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இதன் காரணமாக பாதிப்பு 30 சதவீதத்தை நெருங்கியுள்ளது. அதே போல 215 பேர் உயிரிழந்துமுள்ளனர். ஒட்டுமொத்த உயிரிழப்பானது 19.03 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மாநிலம்முழுவதும்இதுவரை38,83,429 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 19,972 பேர் உயிரிழந்துள்ளனர். அதிகபட்சமாக எர்ணாகுளத்தில் 4,048 பேரும் அதனைத் தொடர்ந்து திருச்சூரில் 3,865 பேரும் 24 மணி நேரத்தில் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஓணம் பண்டிகைக்காக அனுமதிக்கப்பட்ட தளர்வுகள் காரணமாக இந்த எண்ணிக்கை பதிவாகியுள்ளதாகவும், அடுத்த 7-10 நாள்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் மாநில சுகாதார அமைச்சர் வீணா வர்கீஸ் தெரிவித்துள்ளார்.

அனைவரும் தாமாக பரிசோதனைக்கு முன்வரவேண்டும் எனவும், கொரோனா பாதிப்பு ஆரம்பத்திலே கண்டறியப்பட்டால் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாக்க முடியும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கேரளாவின் நிலைமையை சுட்டிக்காட்டி, எதிர்வரும் பண்டிகை நாள்களில் மற்ற மாநிலங்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மத்திய சுகாதாரத்துறைச் செயலர் ராஜேஷ் பூன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதே போல, கேரள மக்களின் உயிரைக் காப்பதில் மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் தோல்வியடைந்துள்ளார் என்று மத்திய அமைச்சர் முரளிதரன் கடுமையாக விமர்சித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அற்புதம்மாள் கோரிக்கையை ஏற்று பேரறிவாளனுக்கு மேலும் ஒரு மாதத்துக்கு பரோலை நீடித்தது தமிழக அரசு





உடல் நலக்குறைவுக்கு சிகிச்சை பெற்று வருவதால் பேரறிவாளனுக்கு பரோலை மேலும் ஒருமாதம் நீடிக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நீண்ட வருடங்களாக சிறையில் உள்ள 7 பேர் விடுதலை தொடர்பாக பல சர்ச்சைகள் எழுந்துவரும் நிலையில், உடல் நலக்குறைவு காரணமாக பேரறிவாளனுக்கு பலமுறை பரோல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பரோலில் இருக்கும் பேரறிவாளன் உடல் நலக்குறைவுக்கு சிகிச்சை பெற்றுவருவதால் பரோலை நீடிக்க வேண்டும் என அவரது தாயார் அற்புதம்மாள் அரசுக்கு கோரிக்கை முன்வைத்திருந்தார்.

இதை ஏற்று, பேரறிவாளனின் பரோல் மேலும் ஒருமாதம் நீடிக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## உணவுப் பொருள்களைக் கையாள்பவர்கள் கட்டாயம் கையுறை அணிய வேண்டும்



உணவுப் பொருள்களைக் கையாளும் பணியில் உள்ளவர்கள் கையுறை அணிவதைக் கட்டாயமாக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உணவு விநியோகம் செய்வோர், பொதி கட்டும் தாள்கள், உறைகளைப் பிரிக்க தங்கள் உமிழ்நீரைத் தொட்டுப் பயன்படுத்துவதால் தொற்றுப் பரவும் அபாயம் உள்ளது என்று சென்னை உயர்நீதிமன்றில் பொதுநல வழக்கு ஒன்று தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், உணவுப் பொருள்களைக் கையாள்பவர்கள் கையுறை பயன்படுத்துவதைக் கட்டாயமாக்க வேண்டும் என தமிழக அரசுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொதுமக்களின் ஆரோக்கியத்தில் எவ்வித சமரசமும் செய்து கொள்ளக்கூடாது என்றும், வருமுன் காப்பதே சிறந்தது என்பதை உணர்ந்து அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

# திருக்கோவில் பிரதேசத்தில் 400 குடும்பங்களுக்கு 2,000

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 22 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு அரசின் உதவிப் பணம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவ் உதவிப் பணத்தொகையானது திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் ஆலோசனைக்கு அமைவாக கிராம மட்ட களஉத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று அரசின் பயணத் தடை கால உதவித் தொகை பணத்தினை நேற்று வழங்கி வைத்திருந்தனர்.

அந்தவகையில் திருக்கோவில் பிரதேசத்தில் அரசின் சுற்று நிருபத்திற்கு அமைவாக அரசிடமிருந்துஎந்தவொருமாதாந்தஉதவிப் பணமும் பெற்றுக் கொள்ளாத சுமார் 780 வறிய குடும்பங்களில் முதல் கட்டமாக 400 குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபா உதவிப் பணம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இவ் உதவிப் பணத்தை திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன், உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். அனோஜா, கிராமசேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் வீடு வீடாகச் சென்று அரசின் பயணத்தடைக் கால உதவித் தொகை பணத்தினை வழங்கி வைத்திருந்தனர்.



# இராணுவத்தினரின் நடமாடும் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு

கொரோனா அனர்த்த நிலைமையை முன்னிட்டு இராணுவத் தளபதியின் வழிகாட்டலின் கீழ் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டமானது இன்று அம்பாறை மாவட்டத்தில் முதற்கட்டமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா வசீர் தலைமையில் ஆரம்பமானதுடன் இராணுவத்தினரின் நடமாடும் தடுப்பூசி வழங்கும் செயற்பாடும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. இன்று காரைதீவு பகுதிகளில் வீடு வீடாகச் சென்று இத்தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு இராணுவத்தினரும் ஒத்துழைப்பு வழங்கி இருந்தனர்.

இந்நடவடிக்கையை கண்காணிப்பதற்காக 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரியும், கல்முனை பிராந்திய இராணுவ மேஜர் சாந்த விஜேயகோனும் சம்பவ இடங்களுக்கு வருகை தந்து பார்வையிட்டனர்.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான நடமாடும் தடுப்பு மருந்தேற்றல் செயற்திட்டமானது இராணுவத்தினரின் பங்களிப்புடன் வீட்டுக்கு வீடு வழங்கப்படவுள்ளதனால் இது வரையிலும் கொவிட் தடுப்பு மருந்து ஏற்றிக் கொள்ளாத 60 வயதிற்கு மேற்பட்டோர் அனைவரும் உடனடியாக தங்களின் விவரங்களை தமக்குரிய கிராமசேவகரிடம் வழங்குவதன் மூலம் இச்சேவையினை விரைவாக பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா வசீர் தெரிவித்தார்.



# வாவியை ஊடறுத்து வந்த காட்டு யானைகள்

மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து களுவாஞ்சிகுடிக்கு வந்த காட்டு யானைகளை வனஜீவராசிகள், பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்கள்கடந்தசெவ்வாய்கிழமை மாலை சென்று 4 காட்டுயானைகளையும், வெடி வைத்து விரட்டி மீண்டும் மட்டக்களப்பு வாவியை கடக்க வைத்து படுவான்கரைப்பகுதிக்குக்கொண்டு சென்றுள்ளனர்.

மிக நீண்டகாலமாகவிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசங்களும். தொல்லைகளும், அதிகரித்த வண்ணமே உள்ளன.

இந்நிலையில் அப்பகுதியில் காட்டுயானைகளின் தாக்கத்தினால் அப்பாவி உயிர்கள் காவுகொள்ளப்பட்டு, பயன்தரும் பல தென்னை, வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்கள், மற்றும் வீடுளையும் அழித்து வருகின்றன.

இந்நிலையில் செவ்வாய் கிழமை 4 காட்டுயானைகள் படுவான்கரைப் பகுதியிலிருந்து மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து எழுவான்கரைப் பகுதியில் அமைந்துள்ள களுவாஞ்சி குடிக்கு வந்துள்ளன .

காட்டு யானைகள் நகர்பகுதிக்கு வந்துள்ளமை குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார், மற்றும் பொதுமக்களும், வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகஸ்த்தர்களுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, மட்டக்களப்பு மாவட்ட வன ஜீவராசிகள் சுற்றுவட்ட அதிகாரி நா.சுரேஸ்குமார் உள்ளிட்ட குழுவினர் வருகை தந்து வெடி வைத்து விரட்டி யானைகளை மீண்டும் மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து படுவான்கரைப் பகுதியின் போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ள தளவாய் காட்டுப்பகுதிக்குக் கொண்டு சென்று விட்டுள்ளனர்.

# கல்முனை தெற்கில் தடுப்பூசி செலுத்தல்



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவுக்கு மேலும் 20 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்நிலையில் குறித்த தடுப்பூசிகள் முதலாவது தடுப்பூசி பெற தவறிய 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் முதன்மை அடிப்படையில் செலுத்தும் நடவடிக்கைகள் கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை பிரிவில் உள்ள 13 சுகாதார வைத்திய பிரிவுகளில் தடுப்பூசி செலுத்தும் மையங்களில் பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் ஜீ. சுகுணன் வழிகாட்டலில் இடம்பெற்றுவருகிறது.

இந் நிலையில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு 2,000 தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றமையையடுத்து தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ. ஆர். எம். அஸ்மி தலைமையில் மருதமுனை அல்-மனார் வித்தியாலயம், கல்முனை அல்- மிஸ்பாஹ் மகா வித்தியாலயம், நற்பிட்டிமுனை அல்-அக்ஸா வித்தியாலயம் ஆகிய 03 இடங்களில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன.

இதனடிப்பையில் கல்முனை அல்- மிஸ்பாஹ் மகா வித்தியாலத்தில் முதலாவது தடுப்பூசி பெற தவறிய 60 வயதிற்கு மேற்பட்டவர்களும் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களும் தடுப்பூசி செலுத்த ஆர்வத்துடன் வருகை தந்து தடுப்பூசியை பெற்றுக் கொண்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்பில் சில்லறைக் கடைகளில் சீனியை பெற மக்கள் அவதியுறும் அவலம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, வாழைச்சேனை உட்பட பல பகுதிகளில் சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் மொத்த விற்பனை நிலையம் மற்றும் சில்லறைக் கடைகளில் பொது மக்கள் சீனியை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில் வாழைச்சேனை – மாவடிச் சேனையில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் நுகர்வோரின் நலன் கருதி ஒருவருக்கு ஒரு கிலோ எனும் நிபந்தனைக்கமைய சீனி விற்பனை செய்யப்படுகிறது.

சீனியைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் அங்கு நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# முகக்கவசங்களை உரிய முறையில் அணியாதோருக்கெதிராக வழக்கு

தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள நிலையில் முகக்கவசங்களை உரிய முறையில் அணியாது பிரதான வீதியினால் பயணம் செய்த 65 பேருக்கெதிராக ஏறாவூர்ப் பொலிஸார் வழங்கு பதிவு செய்துள்ளமையுடன், அனுமதிப் பத்திரங்களின்றி பயணிக்கும் வாகனங்களைக்கண்காணிக்கும்நடவடிக்கையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். உன்னிச்சை முகாம் இராணுவத்தினர் ஏறாவூர்ப் பொலிஸாருடன் இணைந்து கண்காணிப்பு பணியினை மேற்கொண்டுவருகின்றனர்.

அத்தியாவசிய சேவைக்கான பயண அனுமதியைப் பெறாமல் வீதியில் பயணித்த பலரை பொலிஸார் எச்சரித்து வந்தவழியே திருப்பி அனுப்பியுள்ளனர்.



# ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் தொடரின் குழு விவரங்கள் வெளியிடப்பட்டன

2021-22 பருவக்காலத்தில் ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் தொடரின் முதல் சுற்றில் விளையாடவுள்ள அணிகளுக்கான குழு விவரம் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்தான்புலில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 32 அணிகள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கடந்த பருவகாலத்தில் ஐரோப்பாவின் முன்னணி 6 லீக்குகளில் முதலிடம் பெற்ற அணிகளும் சம்பின்ஸ் கிண்ணம் மற்றும் யூரோ கிண்ணங்களை வென்ற அணிகளும் முதலாம் குழுவில் இடம்பெற்றன. அதைத்தொடர்ந்து மற்றைய அணிகள் அடுத்த 3 குழுக்களிலும் இடம்பிடித்தன.

இங்கு நடைபெற்ற குலுக்கல் முறையிலான தெரிவில், 32 அணிகளும் ஏ முதல் எச் வரைக்குமாக ஆங்கில எழுத்துகள் குறிக்கும் 8 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுக்களிலும் தலா 4 அணிகள் இடம்பெறுமாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நடப்பு சம்பியனான செல்சி அணி ஜுவன்டஸ் அணியுடன் குழு எச்சிலும், பிரீமியர் லீக் சம்பியன்களான மன்செஸ்டர் சிட்டி அணி, பரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியுடன் குழு ஏயிலும், பன்டெஸ்லிகா சம்பியன்களான பெயர்ன் முனிச், பார்சிலோனா அணியுடன் குழு ஈயிலும், லாலிகா சம்பியனான அட்லெடிகோ மட்ரிட், லிவர்பூல் அணியுடன் குழு பியிலும் இடம்பெற்றுள்ளன.

அதேபோன்று, ஐரோப்பா கிண்ணத்தை வென்ற வில்லாரியெல் அணி, மன்செஸ்டர் யுனைடெட் அணியுடன் குழு எஃப்பில் உள்ளது. ஐரோப்பாவின் இன்னொரு முன்னணி கழகமும் ஏழு தடவைகள் சம்பியன்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றியதுமான ரியல் மட்ரிட் அணி இத்தாலியின் சம்பியனான இன்டர்மிலன் அணியுடன் குழு டீயில் இடம்பெற்றுள்ளது.

இந்த பருவக்காலத்திற்கான சம்பியன்ஸ் லீக் போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாத மத்தியில் ஆரம்பமாகவுள்ளதாகவும் தொடரின் இறுதிப்போட்டி அடுத்த வருடம் ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் அரங்கில் இடம்பெறும் எனவும் ஐரோப்பிய கால்பந்தாட்ட கூட்டமைப்பு அறிவித்துள்ளது.



## தென்னாபிரிக்க சுழல்பந்து வீச்சாளர் ஷம்சி ராஜஸ்தானுக்காக விளையாடுகிறார்

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் அங்கம் வகித்த இங்கிலாந்து வீரர்கள் பென் ஸ்டோக்ஸ், ஜோஸ் பட்லர், ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் அன்ட்ரூ டை ஆகியோர் அடுத்த மாதம் 19 ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தில் தொடங்கும் 14 ஆவது ஐ.பி.எல். தொடரின் இரண்டாம் பகுதிப் போட்டிகளிலிருந்து விலகியுள்ளனர்.

இந்தநிலையில் அந்த அணிக்கு மாற்று வீரராக தென்னாபிரிக்க இடக்கை சுழல்பந்து வீச்சாளர் தப்ரைஸ் ஷம்சி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். 31 வயதான ஷம்சி, சர்வதேச ரி-20 போட்டிகளுக்கான பந்து வீச்சாளர் தரவரிசையில் தற்போது முதலிடத்தில் உள்ளார். 39 ரி-20 போட்டிகளில் விளையாடி 45 விக்கெட்டுகளை இவர் வீழ்த்தியிருக்கிறார். ஷம்சி ஏற்கனவே 2016 ஆம் ஆண்டில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுடனான 3ஆவது டெஸ்ட் போட்டி மிக வலுவான நிலையில் இங்கிலாந்து



இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்குவந்தபோது தனது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுகளை இழந்து 423 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கிரெய்க் ஓவர்டொன் 24 ஓட்டங்களுடனும் ஒலி ரொபின்சன் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

லீட்ஸில் நேற்று முன்தினம் ஆரம்பமான இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து இங்கிலாந்தின் அதிரடியான பந்துவீச்சில் 78 ஓட்டங்களோடு ஆட்டமிழந்தது.

இதனைத் தெடர்ந்து, பெரியதொரு ஓட்ட எண்ணிக்கையைப் பெற்று இந்தியாவுக்கு அழுத்தத்தை வழங்கும் நோக்கோடு இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸை விளையாடுகிறது. அணித்தலைவர் ஜோ ரூட் 121 ஓட்டங்களையும் டேவிட் மலன் 70, ஹசீப் ஹமீட் 68, ரொறி பேர்ன்ஸ் 61 ஓட்டங்களையும் எடுக்க, இங்கிலாந்து 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 423 ஓட்டங்கள் என்ற வலுவான நிலையில் உள்ளது. இந்திய அணியின் மொஹமட் ஷமி 3 விக்கெட்டுகளையும் மொஹமட் சிராஜ் மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இந்திய அணி பெற்ற முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களைவிட 345 ஓட்டங்களை இங்கிலாந்து அணி அதிகமாகப் பெற்றுள்ள நிலையில் இன்றைய மூன்றாவது நாள் ஆட்டம் தொடர்கிறது.



# கரீபியன் பிறீமியர் லீக் தொடர் ஆரம்பம் கயானா, சென்.கிட்ஸ் அணிகளுக்கு வெற்றி

கரீபியன் பிறீமியர் லீக் (சி.பி.எல்.) ரி-20 தொடரின் ஆரம்பப் போட்டிகளில் கயானா அமசோன் அணியும் சென். கிட்ஸ் அன்ட் நெவிஸ் பட்ரியொட்ஸ் அணியும் வெற்றி பெற்றுள்ளன.

தற்போதைய சி.பி.எல். தொடரின் முதல் லீக் போட்டியில், கயானா அமசோன் அணியும் ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணியும் மோதின. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கயானா அமசோன் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஹெட்மயர் 54 ஓட்டங்களையும் ஓடின் ஸ்மித் 24 ஓட்டங்களையும் எடுத்தனர். ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணியின் அகீல் ஹொசைன் மற்றும் சுனில் நரைன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஜெய்டன் சீல்ஸ், ரவி ராம்போல் மற்றும் இசுரு உதான ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 143 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 133 ஓட்டங்களை மட்டுமே பெற முடிய, கயானா அமசோன் அணி 9 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. டினேஷ் ராம்டின் 28 ஓட்டங்களையும் டிம் செய்பர்ட் 23 ஓட்டங்களையும் எடுத்தனர். கயானா அமசோன் அணியின் ரொமாரியோ செப்பர்ட் 3 விக்கெட்டுகளையும் இம்ரான் தாஹீர் மற்றும் ஒடீன் ஸ்மித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ஒடீன் ஸ்மித் தெரிவுசெய்யப்பட்டார்.



தொடரின் இரண்டாவது லீக் போட்டியில், பார்படோஸ் ரோயல்ஸ் அணியும் சென்.கிட்ஸ் அன்ட் நெவிஸ் பட்ரியொட்ஸ் அணியும் ஒன்றையொன்று எதிர்கொண்டன. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.கிட்ஸ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. செபான் ருதபோர்ட் 53 ஓட்டங்களையும் டுவைன் பிராவோ ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும் எடுத்தனர். பார்படோஸ் ரோயல்ஸ் அணியின் ஒசேன் தோமஸ் 3 விக்கெட்டுகளையும் மொஹமட் ஆமிர் மற்றும் ஜேஸன் ஹோல்டர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 176 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கோடு களமிறங்கிய பார்படோஸ் ரோயல்ஸ் அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 154 ஓட்டங்களையே பெற முடிந்தது. சாய் ஹோப் 44 ஓட்டங்களையும் அசாம் கான் 28 ஓட்டங்களையும் பெற்றனர். சென்.கிட்ஸ் அன்ட் நெவிஸ் பட்ரியொட்ஸ் அணி 21 ஓட்டங்களால் இந்தப் போட்டியில் வெற்றிபெற்றது. சென்.கிட்ஸ் அணியின் செல்டன் கொட்ரெல் மற்றும் டொமினிக் ட்ரேக்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஃபெபியன் அலென் 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக செபான் ருதபோர்ட் தெரிவுசெய்யப்பட்டார்.

இன்றைய போட்டியில் ஜமெய்க்கா தலவாஸ் அணியை சென்ட் லூசியா கிங்ஸ் அணி எதிர்கொள்கிறது.

# வெளிநாடுகளிலிருந்து வருகின்ற பணமும் வீழ்ச்சியடைந்துள்ளது

இலங்கைக்கு அதிக வெளிநாட்டு வருமானத்தைப் பெற்றுத்தரும் வெளிநாட்டுத் தொழிலாளர்களிடமிருந்து இந்த வருடம் ஜூலை மாதத்தில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டு வருமானம் மேலும்வீழ்ச்சியடைந்துள்ளது.

ஜூலைமாதம்வெளிநாட்டுத் தொழிலாளர்களிடமிருந்து 45.33 கோடி அமெரிக்க டொலர்கள் இலங்கைக்குக் கிடைத்துள்ளன. மத்திய வங்கி வட்டாரத் தகவல்களுக்கு அமைய இது கடந்த ஆண்டு ஜூலைமாதத்தில்அனுப்பப்பட்ட 70.21 கோடியுடன் ஒப்பிடும்போது 35 வீதம் குறைவு எனத் தெரிய வந்துள்ளது.

ஜூன்மாதத்தில்வெளிநாட்டு ஊழியர்களிடமிருந்து 47.8 கோடி டொலர்களும், மே மாதத்தில் 46 கோடி டொலர்களும் கிடைத்துள்ளன. கடந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களுக்கான மொத்த பணவரவு 240.7 கோடி டொலர்களாகும்.

இது 2021 மே மாத இறுதியில் கிடைத்த 284.6 கோடியுடன் ஒப்பிடும்போது 18 வீதம் வளர்ச்சியைக் காட்டுகிறது. எனினும், ஜூன் மாதத்தில் கிடைத்த குறைந்தளவிலான பண வரவுடன், 2021ஆம் ஆண்டின் முதல் பாதியின் முடிவில் மொத்த தொகை 332.4 கோடி டொலர்களாக காணப்பட்டதோடு, இது 2020 முதல் பாதியின் 298 கோடி டொலர்களுடன்ஒப்பிடும்போது 11.6 வீதம் வளர்ச்சியைக் காண்பிக்கின்றது.

இந்த ஆண்டு ஜூலை மாதத்தில், முதல் ஏழு மாதங்களில் மொத்த வருவாய் 377.7 கோடி டொலர்களாகும், எனினும் கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 368.2 கோடி டொலர்களாக காணப்பட்ட தோடு இது 2.6 வீதம் குறை வாகும்.

2018 உடன்ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டு ஊழியர்களின் பணம் 4.4 வீதம் குறைந்து 670 கோடி டொலர்களாகக் காணப்பட்டது. அதேவேளை, 2020 ஆம் ஆண்டில் பணம் அனுப்பப்படுவது 5.8 வீதம் அதிகரித்து 710 கோடி டொலர்களாக அமைந்திருந்தது. இந்த நிலையில், 2021நிறைவுக்குள் வெளிநாட்டுப் பணம் 800 கோடி டொலர்களை எட்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

பல சர்வதேச எல்லைகள் மூடப்பட்டதால், புலம்பெயர் தொழிலாளர்கள் காத்திருக்கும் காலம் அதிகரித்துள்ளது.

மேலும், இலங்கைக்குப் பணம் அனுப்புவதற்கான முறையான செயற்பாடுகளின் பயன்பாடு அதிகரித்ததோடு, குடும்பங்கள் தொற்று நோய் அச்சுறுத்தலால் பாதிப்புக்களை எதிர்நோக்கியிருந்ததால், புலம்பெயர்ந்ததொழிலாளர்கள் தமது குடும்பத்திற்கு அனுப்பிய பணத்தின் அளவு அதிகரித்தமை இந்த வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்ததாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறெனினும், முறையான வங்கி முறைக்கும் உத்தியோகப்பற்றற்ற சந்தையால் வழங்கப்படும் பரிமாற்ற விகிதங்களுக்கும் இடையே உள்ளகூர்மையானவேறுபாடு காரணமாக, புலம்பெயர் தொழிலாளர்கள் பணத்தை மாற்றுவதற்கான மோசடி வழிகளை நாட வழிவகுத்துள்ளமையால், இந்த வளர்ச்சி நிலைமையில் ஏப்ரல் முதல் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ள பல நாடுகளில் தடுப்பூசி வழங்குதல், கொவிட் தொற்றுநோயால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மையைக் குறைத்துள்ளதாகவும், இவை பண வரவுகள் குறைவ தற்கு வழிவகுத்துள்ளதாகவும் பொருளாதார ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

# வெளியுறவு அமைச்சர் பீரிஸுக்கு பாராட்டுக் கடிதம் அனுப்பியுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர்





இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங் கையின் புதிய வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுக்கு பாராட்டுக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்திய உயர்தூதரகம் இது தொடர்பில் ட்வீட் செய்துள்ளது. அந்த டுவீட்டின் படி, இரு தரப்பு உறவுக்கு வழிகாட்டும் சிறந்த அயலுறவு, நட்புறவின் முக்கியத்துவம் மற்றும் தலைமைத்துவத்தின் இலக்குக்கு அமைவாக அவருடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்க்கிறேன் என இந்திய வெளியுறவு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# ரயில்வேத் திணைக்களத்துக்கு 13 கோடி ரூபா நாடு 10 நாள் முடக்கத்தால் ஏற்பட்டது நஷ்டம்

கொரோனா வைரஸ் பரவலால் 10 நாள்களுக்கு நாட்டை முடக்குவதன் மூலம் ரயில்வே திணைக்களத்துக்கு 13 கோடியே 33 லட்சம் ரூபா நட்டம் ஏற்படும் என ரயில்வே திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு - நாட்டை முடக்குவதால் ரயில்வே திணைக்களத்துக்கு நாளொன்றுக்கு ஒரு கோடியே 30 லட்சம் ரூபா நட்டம் ஏற்படுகின்றது. மாதமொன்றுக்கு 40 கோடி ரூபா நட்டம் ஏற்படுகின்றது. ரயில்வே திணைக்களத்துக்கு மாதமொன்றுக்கு 50 கோடி ரூபா வருமானம் கிடைக்கின்றது. ஆனால், நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஆரம்பித்த பின்னர் அந்த வருமானத்தில் 10 கோடி ரூபா குறைவடைந்துள்ளது. - என்றார்.

# வவுனியா சதொசவில் சீனிக்குத் தட்டுப்பாடு

வவுனியா நகரில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் சீனியைக் கொள்வனவு செய்யச் செல்பவர்கள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


சீனிக்கான விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள மொத்த வியாபார நிலையங்களில் ஒரு கிலோகிராம் சீனி 205 முதல் 215 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அதனைக் கொள்வனவு செய்யும் உள்ளூர் வர்த்தகர்கள் 225 ரூபா முதல் 240 ரூபா வரையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

ஆயினும் சதொச விற்பனை நிலையத்தில் ஒரு கிலோகிராம் சீனியின் விலை 120 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் அதிகளவான மக்கள் சீனியைக் கொள்வனவு செய்வதற்காக அங்கு செல்லும் நிலையில் சீனி இல்லை என்று அங்கு தெரிவிக்கப்படுகின்றது.

# 55 கிராம சேவகர்களுக்கு கம்பஹாவில் கொரோனா!

## 81 பேர் தனிமைப்படுத்தலில்



கம்பஹா மாவட்டத்தில் 55 கிராம சேவகர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், மேலும் 81 கிராம சேவகர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் இலங்கை கிராம சேவகர்கள் சங்கத்தின் கம்பஹா மாவட்ட தலைவர் காமினி ரணதுங்க ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தின் 13 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவகர்களுக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறுதொற்றுக்குள்ளான கிராம சேவகர்களுக்குப் பதிலாக வேறு பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவகர்கள் தற்காலிகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# 12 வயது சிறுமிக்கு தடுப்பூசி வழங்கிய வைத்தியருக்கு சிலாபத்தில் இடமாற்றம்



சுகாதார அமைச்சின் அனுமதியின்றி 12 வயது சிறுமிக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்ட சம்பவம் தொடர்பில், சிலாபத்தில் கடமையாற்றிய கொரோனாத் தடுப்பூசி மையத்தின் பொறுப்பாளரான வைத்தியர் மற்றும் ஒரு குடும்ப சுகாதார அலுவலர் ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் - கொக்கவில் ஆரம்பப் பாடசாலையில் உள்ள தடுப்பூசி மையத்தின் மருத்துவர் மற்றும் குடும்ப சுகாதார அலுவலர் ஆகியோரே, சிலாபம் அடிப்படை மருத்துவமனையில் உள்ள கொரோனா சிகிச்சை மையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனப் புத்தளம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் தினு பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். கொரோனாத் தடுப்பூசி, வழங்கப்பட்ட பிள்ளை, சம்பந்தப்பட்ட மருத்துவரின் பிள்ளை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், விசாரணையின் முடிவில் இரண்டு அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் புத்தளம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் தினு பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# மிகவும் அச்சமடையக்கூடிய அளவுக்கு கொரோனாத் தொற்று கொடிய நோயல்ல!



எஸ்.பி.திசாநாயக்க கூறுகிறார்

கொரோனாத்தொற்றுமிகவும்அச்சமடையக்கூடிய அளவிலான கொடிய நோய் அல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், 100 இற்கு 81 விகிதமானவர்கள் கொரோனா வால் பாதிக்கப்பட்டமையை அறியாமல் வைரஸிலிருந்து மீண்டு வருகின்றனர் எனக் கூறினார். மக்களிடையே காணப்படும் தேவையற்ற அச்சமே இறப்புகளுக்கு முக்கிய காரணம் என்றும் அவர் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கையில் இறப்பு விகிதம் இன்னும் 1.9 சதவீதமாக உள்ளது என்றும் எஸ்.பி. திசாநாயக்க குறிப்பிட்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.08.2021இல் வெளியிடப்பெற்றது.